1995 ஏப்ரல் 6] [திரு. ம. சின்னசாமி]

வைத்துக்கொண்டு புகை போக்கியை இன்னொரு இடத்திலே வைப்பதற்கு சாத்தியக்கூறு இல்லை, வைக்க முடியாது. இப்போது உள்ள புகைபோக்கிகள் 8 மீட்டர், 9 மீட்டர் உயரம் இருக்கிறது. அதனை 15 மீட்டர் அளவுக்கு உயர்த்தவேண்டும் என்று அந்த தொழிற்சாலைக்கு தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் அறிவுறுத்தியுள்ளது. அது மட்டுமல்லாமல் மேலும் மாசுக் கட்டுப்பாடு சாதனங்களை மேம்படுத்தி சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்றும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம் அந்தத் தொழிற்சாலைக்கு அறிவுறுத்தியுள்ளது. இதனை அந்தத் தொழிற்சாலை செய்கின்றபோது மேலும் பாதிப்பு உண்டானால் அதன் பிறகு வாரியம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்.

பொதுக் கணக்குக்குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. செல்வராஜ், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுக் கணக்குக் குழுவின் சார்பாக இக்குழுவின் 165-வது, 166-வது ஆகிய இரண்டு அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

முற்பகல் 11.15

4. மானியக் கோரிக்கைகள், 1995-96, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை

(ஆ) கோரிக்கை எண் 15 - காவல் துறை

(இ) கோரிக்கை எண் 16 - தீயணைப்புப் பணிகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1995-96 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் தொடர்ச்சி. மானியக் கோரிக்கை எண் 2 - மாநில ஆயத்தீர்வைத் துறை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.